செ. கு. எண்: 028 நாள் : 25.01.2016

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 25.1.2016

12.11.2015 அன்று மதுரை மாநகரம், அண்ணா நகர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்த திரு. ரவீந்திரன்;

15.11.2015 அன்று திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்த திரு. A.ராஜசேகர்;

19.11.2015 அன்று திருநெல்வேலி நகரம், திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்த திரு. அருணாசலம்;

20.11.2015 அன்று சென்னை பெருநகரக் காவல், வியாசர்பாடி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்த திரு. P. சின்னையன்;

20.11.2015 அன்று கோயம்புத்தூர் நகரம், ஆர்.எஸ்.புரம் காவல் நிலையத்தில் முதல் நிலைக் காவலராகப் பணி புரிந்த திரு. N.கிருஷ்ணன்;

21.11.2015 அன்று தேனி மாவட்டம், வருசநாடு காவல் நிலையத்தில் முதல்நிலைக் காவலராகப் பணி புரிந்த திரு. R.பரமசிவம்;

சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்த திரு. பெரியசாமி;

29.11.2015 அன்று கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் காவல் கட்டுப்பாட்டு அறையில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்த திரு. S. வெங்கடாசலம்;

29.11.2015 அன்று சென்னை பெருநகர காவல், மோட்டார் வாகனப் பிரிவில் தலைமைக் காவலராகப் பணி புரிந்த திரு. M.பிரபு;

30.11.2015 அன்று திருச்சிராப்பள்ளி மாநகரம், கோட்டை காவல் நிலையத்தில் காவலராகப் பணி புரிந்த திரு. P.ராஜ்குமார்;

2.12.2015 அன்று கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் காவல் கட்டுப்பாட்டறையில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்த திரு. C.ராஜேந்திரன்;

––– ஆகியோர் உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

பல்வேறு நிகழ்வுகளில் மேற்கண்ட தேதிகளில் உயிரிழந்த இந்த **11** காவலர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், மறைந்த காவலர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**